21st February 1955]

Malampuzha Project colony

* 799 *Q.*—Sri M. NARAYANA KURUP: Will the Hon. the Minister for Public Works be pleased to state what the Government propose to do with the colony that was built up for purposes of Malampuzha Project, Malabar, its lands and buildings?

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI:—" In addition to the Malampuzha project as it stands, the Government have recently sanctioned the construction of the Right Side Canal costing Rs. 75 lakhs. This additional work will take about three years to complete. The question of disposal of the colony including lands and buildings does not therefore arise now."

Industrial Housing Scheme

* 800 *Q.*—Sri A. RATNAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the amount sanctioned by the Union Government to this State on the Industrial Housing Scheme in the year 1953–54;

(*b*) the number of tenements constructed under the subsidized Industrial Housing Scheme in the State;

(*c*) the number and names of industries benefited by this scheme;

(*d*) the amount of loan besides subsidy granted to the industries for the above purpose; and

(*e*) the names and particulars of industries waiting in the list to get the benefit of the Industrial Housing Scheme?

The Hon. Sri M. BHAKTAVATSALAM:—" (*a*) Rs. 2,90,600.

" (*b*) 144.

" (*c*) Four industries, viz., Cement, Textiles, Engineering workshop and Mining.

" (*d*) Loan Rs. 6,07,018, subsidy Rs. 4,08,178; and

" (*e*) Financial assistance under the subsidized Industrial Housing Scheme is sanctioned straightway by the Government of India on receipt of applications for assistance and the recommendations of the State Governments if the applications are found to be in order. The Government of India do not maintain any waiting list of the companies or other bodies for sanctioning assistance at a future date."

Sri A. RATNAM:—" நம்முடைய ராஜ்யத்தில் எத்தனை ஆலைகளில் இருக்கும் தொழிலாளர்கள் தங்களுக்கு இத் திட்டத்தின்படி வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்? அந்தக் கோரிக்கைக்கு ஆலை முதலாளிகள் ஒத்துக்கொண்டிருக்கிறார்களா? தொழிலாளிகள் தாங்களாகவே வீடுகளை அமைத்துக்கொள்ளவேண்டுமென்றால், முதலாளிகள் தொழிலாளர் சார்பில் 25 சதவிகிதத் தொகையை பாங்கியில் கட்டவேண்டுமென்று இருக்கிறது. அப்படிப்பட்ட நிபந்தனையிருந்தால் எந்தத் தொழிலாளியும் வீடு அமைத்துக்கொள்ளமுடியாது. எனவே,

[21st February 1955

அரசாங்கம் இதற்குத்தக்க யோசனைகூறி, இத் திட்டத்தைப் பலனுள்ள வகையில் திருத்தங்களுடன் நம் ராஜ்யத்தில் அமுல் நடத்த முன் வருவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இத் திட்டத்தின்படி எத்தனை ஆலைகளிலுள்ள தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார்கள், எத்தனை முதலாளிகள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்ற தகவல் என்னிடம் இப்பொழுது கிடையாது. பத்து கம்பெனிகள் இதுவரை கேட்டு, அது 'சாங்ஷன்' செய்யப்பட்டிருக்கிறது. அதற்குத்தான் நான் மேற்சொன்ன தொகை செலவிடப்பட்டிருக்கிறது. அதைத்தவிர, இன்னும் 6 கம்பெனிகள் 1,303 வீடுகள் கட்டுவதற்கு அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள். அதுவும் மத்திய சர்க்காருக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அந்த சாங்ஷன் இப்பொழுது எதிர் பார்க்கப்படுகிறது. மத்திய சர்க்கார் அமுல் நடத்தும் 'தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்' நிபந்தனைகளை மாற்றியமைப்பதைப்பற்றி அரசாங்கம் இப்பொழுது யோசிக்க முடியாது."

SRI S. C. VIRUPAKSHAIAH :—" May I know whether the Government will consider the feasibility of utilizing the subsidy for building a few tenements for labourers employed in the Silk Filatures, Kollegal? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The Government will examine that proposal."

SRI S. R. ARUMUGAM :—" இண்டஸ்ட்ரியல் ஹௌசிங் ஸ்கீம் தேயிலைத் தோட்டங்கள் விஷயத்தில் பொருந்தாது என்று தெரிகிறது. தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யக்கூடியவர்களின் வீடுகளும் மிகக் கேவலமான நிலையில் இருப்பதால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் விஷயத்திலும் இத்திட்டத்தை விஸ்தரிப்பதற்கு சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு யோசனை கூறுவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இத்திட்டம் விஸ்தரிக்கப்படவேண்டுமென்று சொன்னால், அது தனித் திட்டமாகும். அதைப்பற்றி நான் பரிசீலனை செய்கிறேன்."

Communist prisoners

* 801 *Q.*—SRI K. MADHAVAN NAMBIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Communist prisoners at present in the Central Jail, Cannanore;

(*b*) whether the Government have received any representations from the public to release them, after the last session of the Assembly; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) There are two convicts in the Central Jail, Cannanore, namely, Arakkal Kunhiraman and Sri Payingappadan Kunhiraman who are said to owe allegiance to the Communist Party of India.

" (*b*) Yes.